முச்சந்தி முரளி




"ஆமை புகுந்த வீடும்
சொல்ஹெய்ம்
நுழைஞ்ச நாடும்
நல்லா இருக்காது
கண்டியளோ"


Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 314

சனிக்கிழமை
05 ஒக்ரோபர் 2024

புரட்டாதி 19
வள்ளுவர் ஆண்டு


ஜனாதிபதி அநுரவின் ஆட்சியில்

## இந்திய - இலங்கை உறவு இன்னும் நெருக்கமாகும்!

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் நம்பிக்கை

கொழும்பு, ஒக். 5

ஜனாதிபதி அநுரவின் ஆட்சியில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு மேலும் ஆழப்படுத்தப்படும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். 11





## உயர்கிறது ரூபா!

கொழும்பு, ஒக். 5

அமெரிக்க டொலருக்கு நிகராக ரூபாவின் நிகர்ப் பெறுமதி தொடர்ந்தும் உயர்வடைந்து வருகின்றது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதத் 11

# 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துக

ஜனாதிபதி அநுரவிடம் ஜெய்சங்கர் வலியுறுத்து

**கொழும்பு, ஒக்ரோபர் 5**

**ஜனாதிபதி அநுரகுமாரவிடம், 13 ஆவது திருத்தத்தை முற்றாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும், மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.** 11

## அநுரவின் கரங்களை பலப்படுத்த இணைக!

சர்வதேசத்தை அழைக்கிறார் முன்னாள் தூதர் சொல்ஹெய்ம்



கொழும்பு, ஒக். 5

ஒரு ஜனாதிபதியாக, முதல் இரு வாரங்களிலும் அநுரகுமார திஸாநாயக்க மிகச் சிறப்பாகச் செயற்பட்டுள்ளார். தெளிந்த சிந்தனையை அவர் வெளிப்படுத்தியுள்ளார். இலங்கையையும் அநுரவின் திட்டங்களையும் பலப்படுத்த சர்வதேசம் முன்வர வேண்டும் என்று இலங்கைக்கான 11

## அரசியல் புள்ளிகளை சந்தித்தார் ஜெய்சங்கர்!

கொழும்பு, ஒக். 5

இலங்கைக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், அரசியல் பெரும் புள்ளிகளைச் சந்தித்துக் கலந்துரையாடி 11

## இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக எதையும் இலங்கை செய்யாது

இந்தியத் தூதுவரிடம் அநுர தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 5

இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதமான எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் இலங்கை இடமளிக்காது என்று ஜனாதிபதி அநுரகுமார 11

தமிழரசுக் கட்சியின்

## மத்திய குழுவை உடன் கூட்டுக!

கொழும்பு, ஒக். 5

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தை உடன் கூட்டுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைத் தலைவரும், 11

## 50 தமிழக மீனவர்கள் நீதிமன்றால் விடுதலை

யாழ்ப்பாணம், ஒக். 5

இலங்கையின் கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்கள் 50 பேர் நேற்றையதினம் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் நேற்று இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட நிலையில், அவர் தமிழக மீனவர்களை விடுவிக்க 11

## முதியவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ். நகரிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் தங்கியிருந்த முதியவர் ஒருவர் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் தவறான முடிவெடுத்து 11

## மாமுனையில் விபத்து; இருவருக்கு படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக். 5

வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதியில் மோட்டார் சைக்கிள்கள் இரண்டு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்தனர். 11

## நீர்வேலியில் மதுபானசாலை; மக்கள் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 5

நீர்வேலியில் திறக்கப்படவுள்ள மதுபானசாலைக்கு எதிராக மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். 11






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதம், மதவாதம் இனிமேல் இடமில்லை

கொழும்பு, ஒக்.5
இனவாதம், மதவாதம் போன்றவற்றுக்கு இனியும் மக்கள் வாக்களிக்கமாட்டார்கள் என புத்த விவகாரங்களுக்கான இணைப்பாளர் சாஷ்டி ரபதி கலகம தம்மரணசி நாயக்க தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் இனவாதம், மதவாதம், நாட்டில் இடம்பெற்று வரும் தொடர்ச்சியான ஊழல் என்பவற்றுக்கு எதிராகவே இம்முறை வாக்களித்துள்ளனர். தற்போது நாடு பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளது. இதனால் நாங்கள் மதங்களுக்கிடையே ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முற்பட்டுள்ளோம். நாங்கள் உண்மையான மத நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவோம் - என்றார். (ரி-6)



எம்முடன் இணைந்த ஆட்சி

# தமிழ்த் தரப்புகள் பேச்சு நடத்தலாம்

தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 5

**பொதுத்தேர்தலுக்குப் பிறகு எம்முடன் இணைந்து ஆட்சி அமைப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (தமிழரசுக் கட்சி) உள்ளிட்ட தரப்புகள் எம்முடன் பேச்சு நடத்தலாம் என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் லால்காந்த தெரிவித்தார்.**

பொதுத்தேர்தலின் பின்னர் ஆட்சியமைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (தமிழரசுக் கட்சி), தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்க முன்வந்தால் அது தொடர்பில் தங்கள் தரப்பு நிலைப்பாடு என்னவாக இருக்கும் என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த லால்காந்த கூறியவை வருமாறு,

அவர்கள் (கூட்டமைப்பினர்) எம்முடன் கலந்துரையாடும் விடயங்கள் எவை என்பது பற்றிப் பரிசீலிக்கவேண்டும், அவற்றுக்கு நாம் இணங்குகின்றோமா அல்லது இல்லையா என்பது பற்றியும் கவனம் செலுத்தப்படவேண்டும். எவர் வேண்டுமானாலும் எம்முடன் பேச்சு நடத்தலாம். ஆனால் அவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் எவை, மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கு அவை தடையாக உள்ளனவா, எமது கொள்கைகளுடன் ஒத்துப்போகின்றனவா என்பன உள்ளிட்ட விடயங்கள் ஆராய்ந்த பின்னரே அது தொடர்பில் முடிவெடுக்கப்படும் - என்றார். (ஒ-44)

# ரணிலின் திட்டங்களை செயற்படுத்த இணக்கம்

கொழும்பு, ஒக்.5
கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது இடைநிறுத்தப்பட்ட நிவாரணத் திட்டங்களை முன்னெடுக்கத் தேர்தல் ஆணைக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் ஓய்வூதியத் தொகை அதிகரிப்பு, முதியோர் நலனோம்புகைத் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்த முயன்ற போதும், தேர்தல் ஆணைக்குழு அதற்கான அனுமதியை வழங்கவில்லை.

இந்த நிலையில், குறித்த திட்டங்களை தற்போது நடைமுறைப்படுத்துவதில் தமக்கு ஆட்சேபனை இல்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

நடைபெறவுள்ள தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடாத நிலையிலும், அநுரகுமார தற்போது ஜனாதிபதியாக இருப்பதன் காரணமாக குறித்த திட்டங்கள் அவருக்குத் தேர்தலில் தனிப்பட்ட செல்வாக்கை அதிகரிக்க உதவாது என்ற ரீதியிலும் இடைநிறுத்தப்பட்ட திட்டங்களை முன்னெடுக்க தேர்தல்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ச-இ)

# உரிமைகளைக் கோரி நாள்களே வீணடிப்பு

***வருந்துகிறார் திலீபன்***

வவுனியா, ஒக். 5
நான் கடந்த காலத்தில் தேசியம், சுயநிர்ணயம் என்று பேசிபல நாள்களை வீணடித்திருக்கின்றேன். மாறாக வன்னியை அபிவிருத்தி செய்வதே எனது கடமை என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கு.திலீபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாங்கள் கடந்த காலங்களில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியில் எமது சின்னத்தில் தனித்துப் போட்டியிட்டு வருகின்றோம். அதேபோல இம்முறையும் வன்னியில் நாங்கள் வீணைச்சின்னத்திலேயே போட்டியிடுகின்றோம்.

தென் இலங்கை மக்கள் மாற்றத்தை விரும்பி, மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளனர். அவர்களது செயற்பாடும் உண்மையில் வரவேற்கத்தக்கது. இப்போது வன்னிமண்ணை அபிவிருத்திப்பாதையில் கொண்டு செல்ல வேண்டியது என்னுடைய கடமை என்கின்ற நோக்கத்தில் பயணிக்கிறேன் - என்றார். (ஓ-110)

# மதுச்சாலைகளின் 'லைசென்ஸ்' விவரங்களை வெளியிடுங்கள்

*ஜனாதிபதியுடனான சந்திப்பில் சுமந்திரன் எம்.பி. கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஒக். 5
மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட அரசியல்வாதிகள் தொடர்பான தகவல்களை உடனடியாக வெளியிடுங்கள் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் சுமந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்குப் பின்னரான, புதிய அரசியலமைப்பு தயாரிப்பு தொடர்பாகவும், அவர்களது தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட 2015 - 2019 க்கு இடைப்பட்ட காலத்தில் முன்னெடுக்கப்பட்ட தேர்தல் வரைபினை நடைமுறைப்படுத்தல் தொடர்பாகவும், இந்தச் செயற்பாடுகளில் தமிழர் தரப்பு பிரதிநிதித்துவம் அவசியம் ஆகியவை குறித்தும் சுமந்திரன் வலியுறுத்தியிருந்தார்.

மேலும் ஊழல் ஒழிப்பு விவகாரங்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் அதற்கான சட்ட ஏற்பாடுகள் சம்பந்தமாகவும் ஜனாதிபதிக்கு தனது ஒத்துழைப்பை வழங்குவதாக தெரிவித்திருந்தார்.

இந்த விடயத்தில் முறைகேடாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பரிந்துரையின் பேரில் கொடுத்த மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான பெயர்ப்பட்டியல் வெளியிடப்படுவதில் தாமதம் ஏற்படுவது மக்கள் மத்தியில் புதிய ஆட்சியாளர்களை குறித்ததான சந்தேகத்தை ஏற்படுத்துவதனை அவர் சுட்டிக்காட்டியிருந்ததோடு உடனடியாக அந்த அரசியல்வாதிகளின் பெயர்ப்பட்டியலை வெளியிட வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்தார். (ச-20)



# டிஜிற்றல் இலங்கைக்கு 'கேட்ஸ் மன்றம்' தயார்

கொழும்பு, ஒக்.5
அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் டிஜிற்றல் மயமாக்கல் திட்டங்களுக்குநிதி, தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை ஆதரவை வழங்குவதற்கு கேட்ஸ் மன்றம் தயாராக உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

கேட்ஸ் மன்றத்தின் சுயாதீன ஆலோசகர் சந்தித்த சமரநாயக்க நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமா நாயக்கவைச் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது புதிய அரசாங்கத்தின் ஊழலுக்கு எதிரான கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு டிஜிற்றல் மயமாக்கலின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய சந்தித்த சமரநாயக்க, அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் டிஜிற்றல் மயமாக்கல் திட்டங்களுக்கு நிதி, தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை ஆதரவை வழங்குவதற்கு கேட்ஸ் மன்றம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். (ச)

# முன்னாள் அமைச்சர்கள் தேர்தலிலிருந்து விலகல்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் சில பிரதான முன்னாள் அமைச்சர்கள் போட்டியிடப்போவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதற்கமைய முன்னாள் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர, பந்துல குணவர்த்தன எதிர்வரும் தேர்தலில் போட்டியிடமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், முன்னாள் இராஜாங்க அமைச்சர்களான பிரமித பண்டார தென்னக்கோன் மற்றும் ஹேசா விதானகே ஆகியோரும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனத் தீர்மானித்துள்ளனர்.

எனினும் தேர்தலில் போட்டியிடாவிட்டாலும் தொடர்ந்தும் செயற்பாட்டு அரசியலில் ஈடுபடுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மீனவர் பிரச்சினை விரைந்து தீர்வுகாணுங்கள்

## ஜனாதிபதிக்கு மனு

**வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் புதிய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தி ஐந்து அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ளது.**

பருத்தித்துறை, கொட்டடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் பொதுக்கூட்டம் கொட்டடி கடற்கரையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போது வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில், எல்லைதாண்டி வரும் இந்திய இழுவைப் படகுகளைத் தடுத்து நிறுத்தவேண்டும், சுருக்குவலை உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட தொழில்களை நிரந்தரமாக தடைசெய்யவேண்டும், போதைப்பொருள் ஒழிப்பு, 16 வயது வரை கட்டாயக் கல்வி உள்ளிட்ட ஐந்து அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மனு வடமாகாண மீனவர்கள் சார்பில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரத்திடம் கையளிக்கப்பட்டது. கூட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரம், சர்வமதத் தலைவர்கள், வடக்கு மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள், மீனவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-100)

## சிறுவர்களிடையே தொற்றுநோய்

### பெற்றோருக்கு அறிவுறுத்து

கொழும்பு, ஒக். 5

தற்போது காய்ச்சல் பரவுவது சிறுவர்களிடையே அதிகரித்துள்ளமையினால் முகக்கவசம் அணியவேண்டும் என சிறுவர்கள் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

கை, கால், வாய் நோய்த் தொற்றால் பாதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

எனவே, சிறுவர்களைப் பாதுகாக்க சரியான சுகாதார வழிகாட்டுதல்களை பெற்றோர் பின்பற்றவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (ச)

## யாழ். மருத்துவமனை வீதியில் கனரக வாகனங்களுக்கு தற்காலிகமாகத் தடை!

யாழ்ப்பாணம், ஒக். 5

நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் யாழ். பொது மருத்துவமனையின் மதகு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஸ்டேசன் வீதி, மருத்துவமனை வீதி சந்தியிலிருந்து 3 ஆம் குறுக்குத்தெரு மருத்துவமனை வீதி வரை புனரமைப்பு வேலைகள் நடைபெறவிருப்பதால் டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி வரை 6 அடி அகலத்துக்குட்பட்ட வாகனங்கள் மாத்திரம் செல்லக்கூடியதாக இருக்கும். கனரக வாகனங்களில் பயணிப்போர் போக்குவரத்தை மேற்கொள்ள மாற்றுப்பாதையைப் பயன்படுத்துமாறு யாழ். மாநகர சபை கேட்டுக்கொண்டுள்ளது. (ச-25)



## இராணுவத்தினரின் சலூன்களை மூடுங்கள்

### ஜனாதிபதி, ஆளுநரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 5

வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள இராணுவ அழகக (சலூன்கள்) நிலையங்களை உடன் மூடுவதற்கு ஜனாதிபதி அநுரகுமாரவும், வடக்கு ஆளுநர் நா.வேதநாயகனும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வடமாகாண அழகக கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் கோரிக்கை முன்வைத்துள்ளது. இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், எங்களது தொழிற்சங்கமானது 2009ஆம் ஆண்டு வரை சிறந்த ஒற்றுமையான கட்டுப்பாட்டுடன் யாப்பு விதி முறைகளுக்கு அமைவாக இயங்கி வந்தது. இருப்பினும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதியில் சிறப்பாக இயங்குவதற்கான சட்டரீதியான உதவியைப் பெற்றுக்கொள்ள பல வழிகளிலும் முயற்சித்தும் அந்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. வடமாகாணத்துக்குள்ளே புதிய அழகக நிலையங்கள் திறப்பதாயின் சங்கத்தின் அனுமதி பெற்றவர்களுக்கே கட்டட உரிமையாளர்கள் கட்டடத்தை வாடகைக்கு வழங்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

அதேபோல் உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளும் சங்க அனுமதி பெற்றவர்களுக்கே புதிய அழககம் திறப்பதற்கான வியாபார உரிமமம் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள இராணுவ அழகக நிலையங்களை உடன் மூடுவதற்கு ஜனாதிபதியும், ஆளுநரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ஒ-26)

## கொழும்புப் புதைகுழி 8 எலும்புக்கூடுகள் மீட்பு

கொழும்பு, ஒக். 5

கொழும்பு போர்ட் சிற்றியில் அடையாளம் காணப்பட்ட மனிதப்புதைகுழியிலிருந்து 8 எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜூலை 13ஆம் திகதி தனியார் நிறுவனமொன்று அதிவேக நெடுஞ்சாலை அமைப்பதற்காக நிலத்தைத் தோண்டும் பணியில் ஈடுபட்டிருந்தபோது இந்த எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

இதனையடுத்து நீதிமன்ற உத்தரவுடன் செப்ரெம்பர் 5ஆம் திகதி தோண்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. செப்ரெம்பர் 26,27,28 ஆகிய தினங்களில் ஐந்து எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இதுவரை மீட்கப்பட்ட 8 எலும்புக்கூடுகள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. அடுத்தகட்ட அகழ்வுப்பணிகள் இம்மாதம் 17ஆம் திகதி ஆரம்பிக்கப்படுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-6)

## தினம் தெரியுமோ?

கலியாணத்துக்கு நாள் குறிச்சும், இன்னும் ஆர் மாப்பிள்ளை எண்டு தெரியாட்டி எப்பிடி இருக்குமோ அப்பிடி இருக்குது வீட்டுக்கட்சியின்ர நிலைமை. எலக்சனுக்கு மற்றக்கட்சியள் எல்லாம் வேட்பாளர்மாரை தெரிவுசெய்து, நோட்டிஸெல்லாம் ஒட்டி பிரச்சாரமும் தொடங்கிட்டினம். ஆனால் வீட்டுக்கட்சியில ஆராரை வேட்பாளரா நிப்பாட்டுறது எண்டு இன்னும் தலையைப் பிய்ச்சுக்கொண்டு நிக்கினமாம். இதுக்கிடையில போனகிழமை வவுனியாவில கூடின மத்திய குழுக்கூட்டத்தில வேட்பாளர்மாரைத் தெரிவு செய்யவெண்டு ஒரு குழுவை அறிவிச்சவை. ஆனால் அந்தக் குழுவில இந்தமுறை எலக்சனில நிக்க விருப்பம் உள்ளவையும் இருக்கினம். அப்பிடியெண்டால் தங்களைத் தாங்களே அவை தெரிவு செய்யிற விசர்க்கூத்துத்தான் நடக்கும். அதைவிட கிழக்குக்காரரும், கொழும்புக்காரரும் இந்தக் குழுவில சேர்படேல. அதால இந்தமுறை தேர்தலில இறங்காத ஆக்களைத்தான் இந்தத் தெரிவுக்குழுவுக்குப் போடோணும் எண்டு சிலர் அப்பவே சொல்லியிருக்கினம். ஆனால் 'இப்ப நேரம் போட்டுது அதைப்பற்றி பிறகு நல்ல முடிவு எடுப்பம்' எண்டு சொல்லி அண்டையான் கூட்டத்தை முடிச்சுப் போட்டினம்.

இப்ப என்னவெண்டால், சூமில வீட்டுக்கட்சியின்ர அரசியல் குழுக்காரர் மீட்டிங் வைச்சு, அந்தத் தெரிவுக்குழுவை ஏற்கிறதெண்டு முடிவெடுத்திருக்கினமாம். மத்திய குழுவில முடிவு செய்யாத ஒரு விசயத்தை அரசியல்குழு எப்பிடி ஏற்கலாம் எண்டு கனபேருக்கு கடுப்பாப் போட்டுது. இப்ப 'பஞ்சாயத்தைக் கூட்டு' எண்ட கணக்கில உடனடியா மத்தியகுழுக் கூட்டம் ஒண்டை வைச்சு, இந்தத் தெரிவுக்குழு விசயத்துக்கு உறுதியான முடிவெடுக்க வேணும் எண்டு மத்தியகுழுவில உள்ள சிலர் பதில் செயலாளருக்கு கடிதம் போட்டிருக்கினமாம். ஆனால் அநேகமா இண்டைக்கு உந்தத் தெரிவுக்குழு ஆரெல்லாம் வீட்டுச்சின்னத்தில எலக்சன் கேக்கப்போயினம் எண்டு சாடைமாடையா எண்டாலும் சொல்லிப்போடுவினம். அதுக்குப் பிறகு மத்தியகுழு கூடியும் பிரியோசனம் இல்லையே.

ஆனால் அப்பிடிக் கடிதம் போட்டவை இன்னொரு பிளானும் வைச்சிருக்கினம். மத்திய குழுவில தீர்மானம் எடுக்காமல் போடுப்பட்ட தெரிவுக்குழுவும், அந்தத் தெரிவுக்குழுவால அறிவிக்கப்பட்ட வேட்பாளர்மாரும் சட்டரீதியா பிழை எண்டு கோட்டுப் படியேறுறதுதான் அந்தப் பிளானாம். ஆனால் அதுக்கெல்லாம் கால அவகாசம் இருக்கோ தெரியேலை. இனிமேல் தொட்டத்துக்கும் உந்த வீட்டுக்கட்சிக்காரர் கோட்டுப்படியேறுவதுதான் வழக்கமா இருக்கப் போகுது போல.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை வெங்கடேஸ்வரருக்கு கொடியேற்றம்







வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். வண்ணை ஶ்ரீ வெங்கட வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தின் மஹோற்சவ கொடியேற்றம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. பத்து நாள்கள் நடைபெறும் உற்சவங்களில் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கஜேந்திரசேவையும், 7ஆம் திகதி திங்கட்கிழமை பூந்தண்டிகை திருவிழாவும், வெண்ணைத் தாழி சேவையும், 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும், 12 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ரி-27)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சிலருக்கு திடீர் பணவரவு மகிழ்ச்சி தரும். சுபச் செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். சிலருக்கு திடீர் பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். சகோதரர்கள் உங்கள் முயற்சிக்கு ஆதரவாக இருப்பார்கள்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர் செலவுகள் ஏற்படக் கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். சுபச் செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**கடகம்:** காரியம் இழுபறியாக முடியும். காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை தொடங்குவது நல்லது. உடல் அசதி உண்டாகும். விற்பனை விறுவிறுப்பாக நடைபெறும். இலாபமும் கூடுதலாகக் கிடைக்கும்.

**சிம்மம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்து விடுவீர்கள். உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு இழுபறியாகும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அவ்வப்போது குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் உண்டாகும். உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். கூடியவரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ள வேண்டாம். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்ய வேண்டி வரும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக்கொள்வார். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் பெறவும் வாய்ப்புள்ளது.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு உடல் ஆரோக்கியத் தில் சற்று கவனம் தேவைப் படும். சிலருக்கு அதிகரிக்கும் செலவுகளால் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**கும்பம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். நிதானம் அவசியம். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் சற்று அலைச்சலும் சோர்வும் உண்டாகும்.

## பண்டத்தரிப்பு கூ.சங்கத்தில் கூட்டுறவாளர் தின நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஒக்.5

பண்டத்தரிப்பு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய 102 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண அபிவிருத்தி ஆணையாளர் என்.திருலிங்கநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் 30 வருட சேவையை பூர்த்திசெய்த பணியாளர்கள், அங்கத்தவர்கள் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். (ச-17)

## ஆசிரியர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.5

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆசிரிய மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் சர்வதேச ஆசிரியர்தின விழா கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் கலாசாலையின் முன்னாள் பிரதி முதல்வரும் இலங்கையின் புகழ் பூத்த நடனத்துறைவிற்பன்னருமாகிய கலா கீர்த்தி சாந்தினி சிவனேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச-25)

## விபத்துகளைத் தவிர்க்க கொத்தமல்லி கசாயம்

*கிளிநொச்சிப் பொலிஸார் முன்மாதிரி*

யாழ்ப்பாணம், ஒக். 5

இரவுநேர விபத்துகளைக் குறைப்பதற்குப் பொலிஸாரால் வாகனச் சாரதிகளுக்கு கொத்தமல்லி தேநீர் வழங்கிவைக்கப்படுகின்றது. கிளிநொச்சி வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரால் இந்த முன்மாதிரிச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இரவு நேரங்களில் வாகனங்களைச் செலுத்தும் வாகனச் சாரதிகளின் உறக்கத்தால் வீதி விபத்துகள் ஏற்பட்டு பல உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன.

இவற்றைக் கருத்தில் கொண்டு கிளிநொச்சி வீதிப் போக்குவரத்து பொலிஸார் இரவு நேரங்களில் பயணிக்கும் வாகன சாரதிகளின் உறக்க நிலையைத் தணிக்க கொத்தமல்லி கசாயம் வழங்கி வருகின்றார்கள்.

கிளிநொச்சிப் பொலிஸ் நிலையம் முன்பாக இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. (ச-113)

## 'ஈழத்துச் சித்தர்கள் சித்தம்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.5

'ஈழத்துச் சித்தர்கள் சித்தம்' எனும் நூல் வெளியீட்டு விழா யாழ். ஊரெழு பலாலி வீதியிலுள்ள பூரண நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த வெளியீட்டில் மேலைத்தேயத்தவர்களின் தமிழ்ப் பஜனை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ச-45)

## நயினாதீவைச் சுற்றி 1000 ஆலமரங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.5

கடலரிப்பைத் தடுக்கும் நோக்குடன் நயினாதீவைச் சுற்றி ஆயிரம் ஆல மரங்கள் நடுகைத் தொடக்க நிகழ்வும் பாடல் இறுவெட்டு வெளியீடும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நயினை மக்கள் அறக்கட்டளை நிர்வாகத்தின் ஒழுங்கமைப்பில் நடத்தப்படவுள்ளது. (ச-66)

## சின்னவெங்காயத்துக்கு நிர்ணயவிலை வேண்டும்

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்ப்பாணக் குடாநாட்டு சின்ன வெங்காய உற்பத்தியை அதிகரிக்கவும் வெங்காயத்துக்கான நிர்ணய விலையை மேற்கொள்ளவும் தற்போதைய புதிய ஜனாதிபதி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வெங்காயச் செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். குடாநாட்டு சின்ன வெங்காய அறுவடை செய்யும் காலப்பகுதியில் பெரிய வெங்காய இறக்குமதிக்கான வரியை அரசு அதிகரிக்கவேண்டும். வெங்காய உற்பத்திக்கான செலவு அதிகரித்துள்ளதால் சின்ன வெங்காயத்துக்கும் சரியான விலை நிர்ணயம் ஒன்றை மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உதட்டளவிலான சொற்களுக்கு பயனில்லை

இலங்கை ஜனாதிபதியான அநுரகுமார திஸாநாயக்கவின், முதலிரு வாரங்களும் மிகச்சிறந்தவை. அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஜனாதிபதி அநுரகுமாரவின் ராஜதந்திர நகர்வுகளும் பொருளாதார மீட்சிக்கான திட்டங்களும் பிரமிக்க வைக்கின்றன என்று தெரிவித்துள்ளார் இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் தூதுவரான எரிக் சொல்ஹெய்ம். அநுரகுமாரவின் ஆட்சி மீதும், இலங்கை மீதும் நம்பிக்கை வைப்பதற்கும் -பலப்படுத்துவதற்கும் சர்வதேசம் முன்வர வேண்டும். ஏனெனில் 'சர்வதேச ஒத்துழைப்பு'தான் இலங்கைக்குத் தற்போது தேவை என்றும் கோரியிருக்கின்றார் அவர்.

ஜனாதிபதியாக அநுரகுமார பொறுப்பேற்றால், இந்த நாடு தனிமைப்படுத்தப்படும். அநுரவுக்கு சர்வதேச அங்கீகாரம் இல்லை. எனவே, அவரால் நாட்டைக் கொண்டுநடத்த முடியாது என்ற விமர்சனங்கள் தேர்தல் காலத்தில் கணையாக வீழ்ந்தன. ஆனால், அந்த விமர்சனங்களையெல்லாம் தகர்த்தெறிந்து ஆட்சிப்பீடம் ஏறிய ஜனாதிபதி அநுர, எவ்வாறான விமர்சனங்களெல்லாம் தனக்கெதிராக குவிந்தனவோ அவற்றை கனகச்சிதமாக எதிர்கொண்டு வருகின்றார். அதில் ஒன்றுதான், அநுர தொடர்பான சொல்ஹெய்மின் 'நற்சான்றுப் பத்திரம்'. எரிக் சொல்ஹெய்ம் மட்டுமல்ல, இந்தியா, சீனா, கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளும் சர்வதேச நாணயநிதியமும்கூட அநுரவுடன் இணைந்து செயற்பட இன்று தயாராகிவிட்டன. இவற்றில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் பிராந்திய நலன்களின் அடிப்படையில் அநுரவின் ஒத்துழைப்பும் அரவணைப்பும் தேவை என்று கொண்டாலும், ஜப்பான் மற்றும் கொரிய நாடுகளின் ஒத்துழைப்பை குறுகிய காலத்தில் வசப்படுத்தியமை அநுரவின் வெற்றிதான். ஆனால், வெறுமனே இவ்வாறான தரப்புகளின் ஒத்துழைப்பை மட்டுமே கொண்டு நாட்டை நகர்த்திவிட முடியாது. அதற்கு 'பேச்சளவில் அல்லாத' ஆழமான ஈடுபாடும் -உதவியும் இலங்கைக்குத் தேவை. தற்போது தேசத்தின் பிரதிநிதிகளாக ஒவ்வொரு இலங்கையர்களும் எதிர்பார்க்கும் விடயமும் அதுவே.

போர்க் காலத்தின் பின்னர் எத்தனையோ உதவிகளும், முதலீடுகளும் இலங்கைக்குக் கிடைக்கப்பெற்றன. ஆனால், அவையெல்லாம் ஊழல் கறையான்களால் காலம்காலமாகத் தின்றழிக்கப்பட்டனவே அன்றி அதன் பயனை, இலங்கையர்கள் முழுமையாக அனுபவித்ததாயில்லை. 'ஊழலுக்கு எதிரானவர்' என்ற மக்களின் எண்ணவோட்டம்தான் இன்று அநுரவை ஆட்சியில் அமர்த்தியிருக்கின்றது. எனவே, தமது உதவித் திட்டங்களுக்கும், முதலீடுகளுக்கும் முழுப்பொறுப்புண்டு என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இலங்கையை சர்வதேசம் அணுக வேண்டிய காலம் இது. கொழுகொம்புக்காக ஏங்கித் தவிக்கும் படர்கொடி போன்றதுதான் இலங்கையின் இன்றைய நிலை. சர்வதேச ஒத்துழைப்பு என்ற பிடிமானம் எவ்வளவுக்கு எவ்வளவு கிடைக்கின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு இந்த நாடு பொருளாதாரத்தில் மீட்சியுறும். ஏனெனில் அநுர ஊழலற்றவர் என்பதே இலங்கையர்களின் தீர்ப்பு.




# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் புதிய குழுவின் கீழ் விசாரணை

**கொழும்பு, ஒக். 5**

**புதிய விசாரணைக்குழுவின் கீழ் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிரேஷ்ட புலனாய்வு அதிகாரிகள் இந்தக் குழுவில் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.**

புதிய அரசாங்கம் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்படும் என வழங்கிய வாக்குறுதிக்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.
ஏற்கனவே நடந்து முடிந்த விசாரணை அறிக்கைகள் இந்தப் புதிய குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அமைச்சரவையின் வழிகாட்டலில் புதிய குழு விசாரணைகளை மேற்கொள்ளும். புதிய விசாரணைக்குழு அமைக்கப்பட்டதை கத்தோலிக்க திருச்சபை வரவேற்றுள்ளது. (ச-6)

# பிறப்புச்சான்றிதழ்கள் அரசால் செயற்றிட்டம்

கொழும்பு, ஒக்.5
பிறப்பு பதிவு செய்யாத (பிறப்புச் சான்றிதழ் இல்லாத) சிறுவர்களுக்குப் பிறப்புச்சான்றிதழ் வழங்கும் நடவடிக்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
சிறுவர் பாதுகாப்புத் திணைக்களமும் பதிவாளர் நாயகம் திணைக்களமும் இணைந்து இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளன. சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஊடாக இந்தப் பிறப்புச்சான்றிதழ் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு எந்தவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது. (ச-6)

## லெபனானில் இலங்கையர்கள் பாதுகாப்பு

லெபனானிலுள்ள இலங்கையர்களுக்கு எதுவித பாதிப்பும் இல்லையெனவும் அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர் என்றும் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.
லெபனானிலுள்ள இலங்கைத் தூதரகம் லெபனானிலுள்ள இலங்கையர்களுடன் தொடர்பிலிருப்பதாகவும், லெபனானிலுள்ள இலங்கையர்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் பாதிப்புக்குள்ளாவோரை தங்க வைப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-6)

## கொரிய எக்ஸிம் வங்கி மீண்டும் நிதியுதவி!

கொழும்பு, ஒக்.5
கொரிய எக்ஸிம் வங்கியால் இடைநிறுத்தப்பட்ட, இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதியுதவியை மீண்டும் வழங்க அந்த வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.
கொரிய எக்ஸிம் வங்கியின் அதிகாரிகள் நேற்றுமுந்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை சந்தித்த போதே இந்த உடன்பாட்டை வெளியிட்டுள்ளனர். (ச)



## இறப்பர் உற்பத்தியை அதிகரிக்கத் திட்டம்

கொழும்பு, ஒக்.5
நாட்டில் விவசாயத்தை வலுப்படுத்துவது தொடர்பான பல புதிய திட்டங்கள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் நிலையில் தேசிய இறப்பர் உற்பத்தியை 60 வீதமாக அதிகரிக்கப் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு திட்டமிட்டுள்ளது. இதற்குத் தேவையான மூலப்பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. அதேவேளை நெல் விவசாயிகளுக்கு ஹெக்டேயருக்கு 25 ஆயிரம் ரூபா உர மானியம் வழங்குவதில் சிக்கல் இல்லை என விவசாய அமைச்சின் செயலாளர் எம். பி. என். எம். விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (ச)

## நாளை

06.10.2024
ஞாயிற்றுக்கிழமை - புரட்டாதி - 20
சுபநேரம் : 09.02- 10.32
ராகுகாலம் : 04.32 - 06.02

## நாளொரு நல்வார்த்தை

**உயர்ந்த விஷயங்களை எளிய முறையில் கூறுவதே அறிவின் லட்சணம்.**

- எமெர்சன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முல்லைத்தீவு மாணவர்கள் மல்யுத்தப் போட்டியில் சாதனை



முல்லைத்தீவு, ஒக்.5
செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை கண்டி திகன உள்ளக விளையாட்டு அரங்கில் கல்வியமைச்சின் பாடசாலைகளுக்கான தேசிய மல்யுத்தப் போட்டியில் முல்லைத்தீவுப் பாடசாலை மாணவர்கள் தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம், வெண்கலப் பதக்கம் போன்றவற்றைப் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டியில் 20 வயதுப் பிரிவில் முல்லைத்தீவு பண்டாரவன்னியன் மகா வித்தியாலய மாணவி சு. பவித்திரா (57கிலோகிராம்) தங்கப் பதக்கத்தையும், ர. டியாழினி (55கிலோகிராம்) வெண்கலப் பதக்கத்தையும், ம. காயத்திரி (47கிலோகிராம்) வெண்கலப் பதக்கத்தையும், செ. அஜித்தா (50கிலோகிராம்) வெண்கலப் பதக்கத்தையும், முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரி மாணவன் ஜெ. வினோஜன் (61கிலோகிராம்) வெள்ளிப் பதக்கத்தையும், சி. மதீஷன் (57, 61கிலோகிராம்) வெண்கலப் பதக்கத்தையும், ஜெ. கஜந் (65கிலோகிராம்) வெண்கலப் பதக்கத்தையும், பு. ரிபிசன் (80கிலோகிராம்) வெண்கலப் பதக்கத்தையும், 18 வயதுப் பிரிவில் முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலய மாணவி சி. புவியரசி (57கிலோகிராம்) வெண்கலப் பதக்கத்தையும், 16 வயதுப் பிரிவில் முல்லைத்தீவு பாண்டியன்குளம் விநாயகபுர மாணவி வி. சைன்சிகா (46கிலோகிராம்) வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டனர். (ச-45-13-19)



# நூலகம் திறப்பு

சாவகச்சேரி, ஒக் .5
சாவகச்சேரி நகரசபையின் பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் நூலகம் நகரப் பகுதியில் உள்ள ஓட்டோச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பேருந்து நிலைய கட்டடத்தில் சாய்வு மேசை வைக்கப்பட்டு தினசரி பத்திரிகைகள் போடப்படும் எனவும், தினமும் காலை 8மணி தொடக்கம் இரவு 8மணி வரை பேருந்து நிலையத்துக்கு வரும் பயணிகளின் நலன் கருதி தினசரி நாளிதழ்கள் போடப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ரி-9)

# தேசிய மட்டப் பளுதூக்கல் போட்டி இந்து மகளிர் மாணவி வெண்கலம்!

யாழ்ப்பாணம், ஒக்.5
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டப் பளுதூக்கல் போட்டி பொலநறுவை இராஜகிரிய தேசியப் பாடசாலையில் நடைபெற்று வருகிறது. போட்டியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவி சிவகுமார் டினா வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுள்ளார். 17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் 59 கிலோ இடை பிரிவில் 78 கிலோ எடையைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தை பெற்றுச் சாதனை படைத்துள்ளார். (ரி-100)





'ஸ்கந்தகுரு ஞானபானு' விருது பெற்ற நீர்வேலி கந்தசுவாமி கோயில் பிரதமகுரு இராஜேந்திர சுவாமி நாதர் குருக்களின் சமய சமூக சேவையை பாராட்டி நீர்வேலி பிரதேசத்தில் உள்ள சகல சமூக அமைப்புகளும் ஒன்றுசேர்ந்து பாமாலைகளை வழங்கி கௌரவித்தன. (ச-25,17)



குடத்தனை வடக்கைச் சேர்ந்த சுவிஸ் நாட்டில் வசித்து வரும் இராசையா செல்வக்குமார் குடும்பத்தினர் குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலைக்கு 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கிச் சாதனங்களை கடந்த வியாழக்கிழமை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (ச-25,100)

# சிறுவர், முதியோர் விழா

கிளிநொச்சி, ஒக்.5
முரசுமோட்டை கோரக்கன்கட்டுக் கிராமத்தில் சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் கோரக்கன்கட்டு பொது நோக்கு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. இந்த நிகழ்வில் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்கள், கலைத்துறை, விளையாட்டுத் துறைகளில் சாதனைகளை நிலைநாட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டதுடன், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் முரளிதரன், கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியின் முதல்வர் அ.பங்கையற்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி-13)

கிளிநொச்சி திரேசம்மா ஆலயத்தின் வருடாந்த திருச்சொரூப பவனி திரேசம்மா ஆலய பங்குத் தந்தை வணக்கத்துக்குரிய சில்வஸ்ராரின் தலைமையில் கிளிநொச்சி நகர்ப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (ச-45-113)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## English Classes Online

* IELTS Classes
* English Classes
* English Classes For School Students
* Grammar + IELTS+ Pass Paper Session

குறுகிய காலத்தில் IELTS பரீட்சைக்கு தயார் செய்யப்படும்.

077 114 8894

(cs.56387) (N-1)



## மரண அறிவித்தல்



### திருமதி மேரி எற்வேட்

(இளைப்பாறிய ஆசிரியை - கண்டி புனித அந்தோனியார் பெண்கள் கல்லூரி)

புலோலியைப் பிறப்பிடமாகவும் கண்டி, ஒட்டகப்புலம் மற்றும் கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட மேரி எற்வேட் கடந்த 02.10.2024 புதன்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஒட்டகப்புலத்தை சேர்ந்த மரியாம்பிள்ளை எற்வேட்டின் பாசமிகு மனைவியும், ரெக்ஸ், மைக்ஸ், பிரெக்ஸி, அலெக்ஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், கொறின், பாபறா, ஆனந்தராஜா, ஜெயந்தினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளைமறுதினம் (07.10.2024) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணி தொடக்கம் அஞ்சலிக்காக கொழும்பு A.F. றேமன் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு பி.ப. 2.30 மணியளவில் பொரல்லை பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
J.ஆனந்தராஜா
(மருமகன்)

(cs.56364) (N-1)


# சகல தமிழ்க் கட்சிகளும் ஓரணியில் இணையுங்கள்

## வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 5

**வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்காக தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் நாடாளு மன்றத் தேர்தலில் ஒன்றிணைந்து பயணிக்கவேண்டும் என வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு கூட்டாக அழைப்பு விடுத்துள்ளது.**

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பின் போது இந்த அழைப்பை அவர் கள் விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்த தாவது:

இதுவரை காலமும் ஆட்சிக்கு வந்த சிங்கள அர சியல் தலைமைகள் அரசியல் தீர்வுகள் பற்றி வாயளவில் கதைத்து தமிழ் மக்களை ஏமாற்றி வந்துவிட்டனர்.

எவ்வளவு காலத்துக்கு எமது வருங்கால சந்ததியி னரும் இந்த அடக்குமுறைகளையும் ஏமாற்றங்க ளையும் அனுபவிக்கப் போகின்றனர். எமது தலை முறையுடன் துன் பங்களை முடிவுக்குக் கொண்டு வர ஒரு மக்கள் சமூகமாக ஒருங்கிணைந்து செயற்படுவோம். இதற்காக, அனைவரும் ஜன நாயக வழிநின்று செயற்படும் ஒரு சமூக இயக்க மாக பரிணமிக்க வேண்டும். குறிப்பாக வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் பொதுத்தேர்தலில் போட் டியிடப்போகும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், கட்சி ரீதியாகத் தனித்துப் போட்டி இடாமல் ஒரு கூட்டாக அல்லது கூட்டணியாகத் தேர்தலில் போட்டி இட்டு வடக்கு - கிழக்கு பிரதேசங்க ளில் அதிக மக்கள் பிரதிநிதிகளை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும்- என்றனர். (ஒ-27,56)

# மனிதவள முகாமை விண்ணப்பம் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்ப டும் மனிதவளமுகாமைத்துவ உயர்தர சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் கல்விப்பொதுத் தராதர சாதாரணதரப்பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், முதல் மொழி உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு குறைந்தது 2 பாடங்களில் திற மைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது திறந்த பல்கலைக்கழகத்தில் நடத்தப் படும் ஏதேனும் சான்றிதழ் கற்கை நெறியை பூர்த்திசெய்திருத்தல் அல்லது திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற் றுக்கொள்ளக்கூடிய பொருத்தமான புலத்தில் மட்டம் 3 இல் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

18 வயதுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பப் படிவங் களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவ ரியில் பிரவேசித்து எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும். மேலதிக விவரங்களுக்கு யாழ்.பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாக மற்றும் 0212223374 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித் துள்ளார். (ச-25)


## காணி விற்பனைக்கு

- அராலி மத்தி வட்டுக்கோட்டையில் முருகமூர்த்தி பாடசாலை முன் ஒழுங்கையில் பயன்தருமரங்கள் நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய வீடு வளவு - 17 பரப்பு விற்பனைக்குண்டு.
- வட்டுக்கோட்டை - பொன்னாலை வீதியில் யாழ்ப்பாணக் கல்லூரியில் இருந்து 500m தூரத்தில் காப்பற் வீதியை முகப்பாகக் கொண்ட 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 076 026 6576

(cs.56357) (N-1)



## பெயர் மாற்றம்

பளை இத்தாவில் கோவில் காட்டில் வசிக்கும் **சவுரிமுத்து செயராசா** ஆகியநான் எனது பெயரை **சவுரிமுத்து ஜெயராசா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சவுரிமுத்து ஜெயராசா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

சவுரிமுத்து ஜெயராசா

(cr 43342) (N-1)



## காணி விற்பனைக்கு

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் பருத்தித்துறை வீதியிலிருந்து 100 m தூரத்தில் 14 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

02 பரப்பாகவும்
01 பரப்பாகவும்
1 1/2 பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்

தொடர்பு: 077 836 3050
075 889 5625

(cs.1522) (N-1)



## 8 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கார்த்தி சுப்பிரமணியம்

(ஓய்வு நிலை எழுதுவினைஞர் யா/சா/றிபேக் கல்லூரி)

திதி திருதிகை வளர்பிறை

மாண்டார் மீள்வதில்லை மண்ணுலக
நியதியிதுவாம்
நீண்டகாலம் வாழ்வு இல்லை நிலவுலகு
வாழ்வு மாயம்
பூண்ட புகழ் சுப்பிரமணியம் போனவழி
நாமுமென்று
ஆண்டவன் அடி வணங்கி ஆறி மனம்
தேறுவோ

தோற்றம் 26.05.1932
மறைவு 04.10.2016

குடும்பத்தினர்.



அமரர் முருகேசு தனபாலன் அவர்களின்

## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம் பிற்போடப்பட்டுள்ளது



அன்னாரின் மூத்த சகோதரனான **முருகேசு சிவபாலன்** அவர்கள் நேற்றுமுன்தினம் (03.10.2024) வியாழக்கிழமை காலமானதால், நாளை **(06.10.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற இருந்த மேற்படி கிரியைகளும் மதிய போசனமும் பிற்போடப்பட்டுள்ளன** என்பதனை அறியத் தருகின்றோம்.

**குடும்பத்தினர்.**

இல.7, புகையிரத வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 17 . 12 . 1941

மறைவு 20 . 09 . 2024

கடந்த 20.09.2024 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் அன்புத் தாய்

## அமரர் இந்திராதேவி கனகலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியை காசிப்பிள்ளை மகா வித்தியாலயம் - நல்லூர், ஞானோதயா மகா வித்தியாலயம் - கல்வியங்காடு, பளை மகாவித்தியாலயம் - பளை)

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (06.10.2024) ஞாயிற்றுக் கிழமை நல்லூர் சட்டநாதர் கோவில் **"திவ்ய ஜீவன சங்க" மண்டபத்தில்** நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், நேரிலும், தொலைபேசி மூலமாகவும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**56, அரச வீதி,**
**நல்லூர்.**

**குடும்பத்தினர்**
**071 813 3423**

# 31 ஆம் நாள் நினைவுதினம்



மலர்வு 17 . 12 . 1933

உதிர்வு 05 . 09 . 2024

எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் பின்னர்
திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் தவமலர் செல்வரத்தினம்

**திதி: திருதியை**

எழுதுராம் எழுது மட்டு வாழ் தனிலே
தவமலர் எனும் நாமம் கொண்ட மலரம்மா
கல்வியறிவிலே உயர்வானாயம்மா
குணத்திலே நீர் நிறை குடம் அம்மா
பேச்சிலே நீர் மென்மையம்மா
தூய்மையிலே நீர் முதன்மையம்மா
குடும்பத்தின் குலவிளக்கம்மா
உனை உருக்கி உன் குடும்பத்தை ஏற்றிய தீபமம்மா
தவம் என்ற பெயரிலே தவம் பெற்றாயம்மா
தவமலர் என்றால் குணமலரம்மா
பெரிய கேணிப்பிள்ளையார் உன் குல தெய்வமம்மா
தவறாமல் செல்வாயம்மா
எங்கு சென்றாயம்மா எமை விட்டு
உன் நினைவுகள் அழியாதம்மா என்றும்
எம் இதயத்தில் வாழுவாயம்மா எங்கள் தெய்வம்மா

**தலங்காவல் பிள்ளையார் கோவில்**
**7 ஆம் வீதி,**
**திருநெல்வேலி (நாவலடி வீதி)**

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**
077 616 5417, 077 020 1366, 071 833 4376

(cs 56363) (N-1)

# மரண அறிவித்தல்

## கதிரவேலு கனகசபாபதி

(ஓய்வுபெற்ற வடமாகாண மின்சார சபை களஞ்சியப் பொறுப்பாளர்)



**தோற்றம்** **17.11.1943** **மறைவு** **01.10.2024**

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி கதிரவேலு கடந்த 01-10-2024 செவ்வாய்க்கிழமை அன்று இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற குணேஸ்வரி (குணம்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, குகதாசன் மற்றும் நல்லநாதன், இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சரஸ்வதி (மணி), காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் சறோஜினி, அனுஷியா, காலஞ்சென்ற சதானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற பரமலிங்கம் அவர்களின் அன்புச் சகலனும், தயாபரன், காலஞ்சென்ற ஸ்ரீதரன் மற்றும் கிருபாகரன், காலஞ்சென்ற ஜெயாதரன் மற்றும் சுசிகலா, யஐந்தன் யசித்தா, யனுதா ஆகியோரின் அன்பு மாமனாரும், சொர்ணரூபா, மதுமதி, அகிலன், அசந்தன், சயந்தன், டிலான், மதுஷா, தனுசன் ஆகியோரின் பெரியப்பாவும், தமிழ்வாணி (வாணி), சிவகுமார் (சிவா), நந்தகுமார் (பாபா), காலஞ்சென்ற உதயகுமாரி (வதனி) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (06-10-2024) ஞாயிற்றுக்கிழமை காலை 07:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10:00 மணியளவில் சித்துப்பாத்தி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**42 திருமகள் வீதி,**
**அரியாலை யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**தொடர்பு: 021 222 6748**

(CS/56370) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 17 02 1937

மறைவு 03 10 2024

## திருமதி செல்லத்துரை நாகரத்தினம் (சரசு)

ஆவரங்கால் மேற்கு, நெல்லியோடையை பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கு தோப்பை வசிப்பிடமாகவும் தற்போது வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த செல்லத்துரை நாகரத்தினம் (சரசு) அவர்கள் 03.10.2024 வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற பெரியதம்பி சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அருமை மகளும் காலஞ்சென்ற இளையதம்பி சேதுப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் செல்வபூபதி, காலஞ்சென்ற திரிபுரசுந்தரி, காங்கேயமூர்த்தி, பத்மசுந்தரி, சித்திராதேவி, ஸ்ரீதரன், காலஞ்சென்ற ஸ்ரீகுகன் சுசீலாதேவி ஆகியோரின்அன்புத்தாயாரும் ஆவார். **அன்னாரின் பூதவுடல் 06.10.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு A.F.Raymond Funeral Directors (ரேமன்ட்) Raymond House Senanayake Mawatha, கொழும்பு-08 எனும் முகவரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.பகல் 3.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி பி.ப 4.30 மணிக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.** இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.13/9, தயா வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு-06.**

**தகவல் : திருமதி வி.சித்திராதேவி (மகள்)**
T.P : 0776643341, 011 2365845

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 04.11.1935 — மறைவு 05.09.2024

கடந்த 05.09.2024 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

## கயிலாயபிள்ளை தங்கரத்தினம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 03.10.2024 வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (05.10.2024) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**செட்டிவளவு ஒழுங்கை,
இணுவில் மேற்கு,
இணுவில்.**

**குடும்பத்தினர்.**
T.P:077 2087 976

(CS 1532)A-1

## மரநடுகை இன்று

யாழ்., ஒக். 5

வள்ளலாளரின் 201 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு மரநடுகை விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் நவாலிப் பிரதான வீதியில் இடம்பெறவுள்ளது.

இதன்போது 201 நிழல்தரு மரக்கன்றுகள் நடப்படவுள்ளன.

(ச-66)

## பொதுக்கூட்டம்

குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 4 மணியளவில் ஆலய முன் மண்டபத்தில் ஆலய பரிபாலனசபைத் தலைவர் க.சின்னராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

(ம-66)

# மரண அறிவித்தல்



## தம்பையா காத்தலிங்கம்

முல்லைத்தீவு மாவட்டத்தினைப் பிறப்பிடமாகவும், வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி, கிளிநொச்சி ஆகிய இடங்களை வதிவிடங்களாகவும் கொண்ட தம்பையா காத்தலிங்கம் அவர்கள் கடந்த 01.10.2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தம்பையா - தம்பையா செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், நாகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, நல்லம்மா, ஆசிருவாதம், கந்தசாமி, பொன்னுத்துரை, கணபதிப்பிள்ளை, சிங்கம், உதயன், இராசன், சின்னதங்கம், முத்து, முருகுப்பிள்ளை, செல்லம்மா, தங்கம்மா மற்றும் நிர்மலா (ராணி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பிரேம், கீதப்பிரியா, ரமணன் மற்றும் லதா, ரெஜி, காந்தன், சதீஸ், ரமேஸ், தேவகி, குட்டி, மேனன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மொறாயஸ், புவனேஸ்வரி, விஜி, நீரோ, கீதா, நிரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிருந்தி, தபோ, சவுந்தி, அபி, சங்கவன், சாமந்தி, சாத்வீகன், பகல், தமி, துவாரகா, விருத்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.10.2024) சனிக்கிழமை காலை 9.30ற்கு தருமபுரம் முதியோர் இல்லத்தில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்று முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் வதிவிடமான 259/1, குருகுலம் வீதி, ஜெயந்தி நகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (06.10. 2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இறுதிக் கிரியைகள் நிறைவுபெற்று திருநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தோற்றம் 06.07.1940 — மறைவு 01.10.2024

**தகவல்:
குடும்பத்தினர்.**

(CS 1531) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சா எண்ணெய் விலை உயர்வு!

தெஹ்ரோன், ஒக். 5

வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள போர் சூழ்நிலையால் உலகளாவிய ரீதியில் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகள் கடுமையாக உயர்வடையக்கூடும் என சர்வதேச பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ம)


## பணிப்பெண் தேவை

யாழ்.நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை

தொடர்பு: 077 26 26 944

## தென்னங் காணி விற்பனைக்கு

எழுதுமட்டுவாள் A-9 வீதியிலிருந்து 2KM தூரத்தில் 3 ஏக்கர் காணி விற்பனைக்கு.

தொடர்பு: 077 23 90 780

## நல்லூர்க் கந்தன் திருமண சேவை

எம்மிடம் சகலருக்குமான குறிப்புகள் கைவசம் உண்டு. செவ்வாய் உள்ளது செய்வாய் இல்லாதது சூரியன் செவ்வாய் குள்ளம் உள்ளது. குள்ளம் இல்லாதது உத்தியோக குறிப்புகள் உத்தியோகம் இல்லாதது விசேசமாக வெளிநாட்டு மணமகள்கள் எம்மிடம் உண்டு.

ஆண் V செவ்வாய் இல்லாது 1977 ம் ஆண்டு அச்சுவினி நட்சத்திரம் யாழ் வருவார் அவருக்கு மணமகள் தேவை.

ஆண் V 1985ம் ஆண்டு சுவாதி நட்சத்திரம் செவ் உண்டு சொந்தமாக நகைக் கடை வைத்திருக்கிறார் மணமகள் தேவை.

நீங்கள் விரும்பியவாறு மணமக்களை தெரிவு செய்யலாம் துரிதமாக

தொடர்பு: வி.ஜெயந்தி - 077 973 3183 (CS 1527) V-1


# ஆத்மசாந்தி பிரார்த்தனை அழைப்பு



குரோதி வருடம் ஆவணித் திங்கள் 7ம் நாள் (23.08.2024) வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர்**

## நாகரத்தினம் தனபாலசிங்கம்

**(ஓய்வு நிலை அதிபர் யா/வட்டு இந்துக் கல்லூரி)**

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை எதிர்வரும் குரோதி வருடம் புரட்டாதி 20ம் நாள் (06.10.2024) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணியளவில் **திவ்ய மஹால் மண்டபத்தில் (இல.1001, வண்ணார்பண்ணை, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்)** நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**39/1, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர். (077 404 9383)**

# மரண அறிவித்தல்



**தோற்றம் 09.09.1950** **மறைவு 03.10.2024**

## முருகேசு சிவபாலன்

**(முன்னாள் ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்)**

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் கல்வயல் சாவகச் சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சிவபாலன் அவர்கள் நேற்று முன்தினம் (03.10.2024) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - கனகேஸ்வரி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா - தங்கம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், இராஜராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும், சுகாஜினி (பலநோக்கு கூட்டுறவு சங்கம், சாவகச்சேரி), சிவகரன் (சாவகச்சேரி), தயாழினி (வவுனியா), வசீகரன் (பொலிஸ் உத்தியோகத்தர், பூநகரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், முரளிதரன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பர்த்தீஸன் (Engineer - ZTE Mobital SLT), கார்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற தேவபாலன் (ஜேர்மனி), காலஞ்சென்ற தனபாலன் (முன்னாள் கணித ஆசிரியர், சென்.பற்றிக்ஸ், யாழ்ப்பாணம், ஓய்வுநிலை உத்தியோகத்தர் சுகாதார திணைக்களம் - கிளிநொச்சி), குணபாலன் (UK), சந்திரபாலன் (சுவிஸ்), ஜீவச்சந்திரமணி (யாழ்ப்பாணம்), சுந்தரபாலன் (UK), காலஞ்சென்ற கிருஸ்ணபாலன் (யாழ்ப்பாணம்), நந்தபாலன் (நோர்வே), விஜயபாலன் (UK) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராஜகுலதேவி, கோசலா, கௌரி, ராஜேஸ்வரி, ஞானதேசிகன் (ஓய்வுநிலை பிரதி அதிபர், யாழ்.இந்துக் கல்லூரி), கமலவதனி, பிரசாந்தினி, காலஞ்சென்ற நாகராஜா (மட்டுவில் கைலைநாதன் (வவுனியா), சாரதாம்பாள் (கொழும்பு), ஸ்ரீதேவி (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும், பானுஜன், அஷ்விஜன், பிரமோத்ஜன், லிதீஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.10.2024) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.137, சிவநிதி, நுணாவில் கல்வயல் வீதி, கல்வயல், சாவகச்சேரி.**

**தகவல் : குடும்பத்தினர் 077 880 2254 077 990 7071**

# கடற்றொழில் அதிகாரிகள் மீதும் சாட்டையைச் சுழற்ற வேண்டும்

## வடக்கு மீனவர்கள் கோரிக்கை

கொழும்பு, ஒக். 5

**கடற்றொழில் சார்ந்த நிர்வாகங்களிலும் ஊழல் நிறைந்துள்ளது. அதற்கமைய ஊழலுக்கு எதிராக சாட்டையை சுழற்றும் புதிய ஜனாதிபதி கடற்றொழில் அமைச்சு மற்றும் திணைக்கள அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுத்து எமது கடல் வளத்தைப் பாதுகாப்பதுடன் கடற்றொழிலாளர்களது வாழ்வாதாரத்தையும் காப்பாற்றுமாறு வடக்கு மீனவர்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்ற வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச உப தலைவர் நாகராசா வர்ண குலசிங்கம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எங்கட கடலும் கடல் சார்ந்த சூழலும் முற்று முழுதாக பாதிக்கப்பட்டு மாசடைந்து போய்க்கொண்டிருக்கிறது. வெளிநாட்டுப் படகுகளினாலேயே எங்களது கடல் வளம் அழிக்கப்பட்டு வருகிறது. நான் சொன்னதைத்தான் செய்வேன் செய்வதைத்தான் சொல்லுவேன் என வசனம் பேசிய கடற்றொழிலாளர் முன்னாள் அமைச்சர் கடற்றொழிலாளர்களுக்கு எதனையுமே செய்யவில்லை.

கடற்றொழில் சார்ந்த நிர்வாகங்களிலும் ஊழல் நிறைந்துள்ளது. லஞ்சத்தை வாங்கிவிட்டு தடை செய்யப்பட்ட சட்டவிரோத தொழில்களுக்கு அனுமதியை வழங்கியுள்ளனர். குறித்த அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரும் தத்தமது பொக்கற்றுகளை நிரப்பிக் கொண்டு கடல்வளத்தை அழிப்பதிலும் கடற்றொழிலாளர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருவதற்கும் துணைபோய்க் கொண்டுள்ளனர். எனவே ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை அதிரடியாக கையிலெடுத்துள்ள புதிய ஜனாதிபதி கடற்றொழிலாளர் பிரச்சினையையும் உடனடியாக கையிலெடுக்கவேண்டும். கடற்றொழில் துறையில் நிரம்பி வழியும் ஊழல் பேர்வழிகளையும் சட்டத்தின் முன்நிறுத்தி தண்டனையைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் - என்றார். (ஒ-100)

# தேசிய மக்கள் சக்தி இனவாதக் கட்சியல்ல

## தமிழர்கள் நிச்சயம் ஆதரிப்பார்கள்

கொழும்பு, ஒக். 5

தேசிய மக்கள் சக்தியினர் இனவாதிகள் அல்லர். எனவே, பொதுத்தேர்தலில் தமிழ் மக்களின் அமோக ஆதரவு கிட்டும். அதன்மூலம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை பெறமுடியும் என்ற நம்பிக்கை உள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற் றுக்குழு உறுப்பினரான சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது தலைவர் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க எளிமையானவர். தனது நடத்தைமூலம் அவர் அதனை உறுதிப்படுத்தி வருகின்றார். மக்கள் எமக்கு வழங்கியுள்ள பொறுப்பு உரிய வகையில் நிறைவேற்றப்படும்.

ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கு, கிழக்கில் இருந்து எமக்கு விழாத வாக்குகள்கூட பொதுத் தேர்தலில் கிடைக்கும் என உறுதியாக நம்புகின்றோம். அந்த ஆதரவுடன் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் கிட்டும் என எதிர்பார்க்கின்றோம்.

தேசிய மக்கள் சக்தியினர் இனவாதிகள் அல்லர். அனைவருக்கும் சம உரிமை வழங்கி, இலங்கையர்கள் என்ற நாமத்தை தேசிய மக்கள் சக்தியால்தான் காக்க முடியும் என்பது மக்களுக்கு தெரியும். எனவே, ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ், முஸ்லிம் மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற வாக்குகள் பொதுத்தேர்தலில் நிச்சயம் இரட்டிப்பாகும் - என்றார். (ஒ-44)


## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட் யாழ்ப்பாணம். K.K.S. றோட் சுன்னாகம்

BARATHY - சித்தன்கேணி

(எமது மூன்று நிறுவனங்களிலும்)

பிரிவு-02

A/L 2026 கலை-வர்த்தகப் பிரிவு

இன்று ஆரம்பம் 5-10-2024 சனிக்கிழமை

சகல பாடங்களும் ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.

நீங்கள் நன்கு அறிந்த யாழ். மாவட்டத்தின் முன்னணி ஆசான்களினால்

உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு:

யாழ். நகரில் - 077 22 09 651

சுன்னாகத்தில் - 075 91 60 417

சித்தன்கேணியில் - 077 94 08 682


# பூசைப்பொருள்கள் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்.குடாநாட்டில் நவராத்திரி பூசைப் பொருள்களின் விலை அதிகரித்துள்ளன என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர். கடலை கிலோ 600 ரூபாவாகவும் அவல் கிலோ 300 ரூபாவாகவும், சர்க்கரை கிலோ 300 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. அதே வேளை தேங்காயும் நூறு ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தரணி தொழிலுக்கு திரும்பினார் அலி சப்ரி!

## அரசியலுக்கு வரமாட்டேன் என்றும் அவர் அழுத்தம்திருத்தமாக அறிவிப்பு

கொழும்பு, ஒக். 5

மிகவும் சவாலான ஐந்து வருட காலப் பகுதியில் அரசியலில் என்னால் முடியுமான அனைத்தையும் இந்த நாட்டுக்காகச் செய்தேன். நாட்டுக்கு ஆற்றிய சேவை தொடர்பில் நான் திருப்தியுடன் வெளியேறுகிறேன். இனி அரசியலில் பிரவேசிக்கமாட்டேன். அதே நேரம் எனது சட்டத்தரணி தொழிலுக்குத் திரும்பியுள்ளேன் என்று ஜனாதிபதி சட்டத்தரணியும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதுடன் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. இதையடுத்தே முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அரசியலிலிருந்து முழுமையாக வெளியேறியுள்ளதுடன் மீண்டும் தனது சட்டத்தரணி தொழிலை ஆரம்பித்திருக்கிறார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தனது முன்னைய சட்டத்தரணி தொழிலை ஆரம்பித்த ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தனது குழுவினருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் ஒன்றையும் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டு, 'எனக்குரிய இடத்துக்கு மீண்டும் திரும்பி வந்தமை தொடர்பில் நன்றாக உணர்கிறேன்" என்றவாறாக அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

(அ-ம)

### 13 ஆம்...

ஜனாதிபதிக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கும் இடையிலான கலந்துரையாடலில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சு நேற்று அறிக்கையிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் ஐக்கியம், ஆட்புல ஒருமைப்பாடு, இறைமை ஆகியவற்றைப் பேணும் அதேவேளை, தமிழர்கள் உட்பட அனைத்து சமூகத்தினரினதும் சமத்துவம், நீதி, கௌவரம், சமாதானம் ஆகியவற்றுக்கான அபிலாஷைகளுக்கு இந்தியா ஆதரவளிக்கின்றது என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி அநுரவிடம் தெரிவித்துள்ளார் எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மீனவர்கள் குறித்த இந்தியாவின் கரிசனையை வெளியிட்டார். அவர்களையும் அவர்களின் படகுகளையும் கூடிய விரைவில் விடுதலை செய்யவேண்டும் என வலியுறுத்தியுள்ளார். மேலும் அவர்களுக்கு எதிராக பெரும் அபராதத்தை விதிப்பதை மறு பரிசீலனை செய்யவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம-இ)

### மத்திய...

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சிறீதரன், கொழும்பு மாவட்டக்கிளைத் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா ஆகியோர் கட்சித் தலைமைக்கு தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தை நடத்தவேண்டியதன் அவசியம் தொடர்பில் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் உள்ளதாவது:-

"நவம்பர் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களைத் தேர்வு செய்வதற்கான தேர்வுக் குழு இன்னும் சட்டபூர்மாக கட்சியின் யாப்புக்கு முரணில்லாத வகையில் நியமிக்கப்படாத போதும் பலர் தங்களை இப்போதே தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்களாகப் பிரச்சாரங்களை முன்னெடுப்பதை சமூக ஊடகங்களில் காணக்கிடைக்கின்றது. எனவே பின்வரும் காரணங்களைக் கருத்திற்கொண்டு உடனடியாக மத்திய குழுவைக் கூட்டி உரிய முறைப்படி தீர்மானங்களை எடுப்பதே முறையானது.

தேர்தலில் போட்டியிடுவதற்காக விண்ணப்பித்துள்ளவர்களின் பெயர்கள் தேர்வுக்குழுவில் உள்வாங்கப்பட்டிருப்பது இயற்கை நீதிக்கு முரணானது. தேர்வுக் குழுவின் உறுப்பினராக இருந்து ஒருவர் தன்னைத் தானே தேர்வு செய்வது எப்படி நியாயமாகும்.

கட்சியின் யாப்புக்கு அமைய ஒரு தீர்மானம் எடுப்பதாயின் அவ்விடயதானம் ஒருவரால் முன்மொழியப்பட்டு மற்றுமொரு அங்கத்தவரால் வழிமொழியப்படல் வேண்டும். ஆனால் தேர்வுக்குழு விவகாரம் முன்மொழியப்படவுமில்லை வழிமொழியப்படவுமில்லை. எனவே இதற்கு மேலும் தேர்வுக்கு குழு இதுதான் என்று தனிப்பட்டரீதியில் பிரகடனப்படுத்துவது கட்சியின் யாப்புக்கு முரணானதாகும்.

'கடந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் தோல்வியுற்றவர்கள் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது' என்பது சரியான விடயமல்ல ஏனெனில் எம்.சிவசிதம்பரம் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்து பின்னர் அடுத்த தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக அமிர்தலிங்கத்துக்குப் பின்னர் தலைமைத்துவ இடைவெளியை அலங்கரித்தார். இது யாராலும் மறுக்க முடியாத வரலாறு. தோல்வியடைதல் என்பது இங்கு கருத்தில் கொள்ளப்படுவது பொருத்தமானதல்ல" - என்றுள்ளது. (அ-ம-இ)

### மாமுனையில்...

மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாமுனை இறக்கச் சந்தியில் நேற்று மாலை 5 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த இருவரும் மருதங்கேணி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ம-100)

### இந்திய...

இலங்கைக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஜனாதிபதி அநுரவைச் சந்தித்து நீண்டநேரம் கலந்துரையாடினார். இதன் பின்னரே ஜனாதிபதி அநுரவின் ஆட்சியில் இந்தியா - இலங்கை இடையிலான இரு தரப்பு உறவை வலுப்படுத்தும் நம்பிக்கையை ஜெய்சங்கர் வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன், இலங்கையின் பொருளாதார மீட்சிக்காக இந்தியாவின் ஆதரவையும் இந்தியாவின் அர்ப்பணிப்பான ஈடுபாட்டையும் ஜெய்சங்கர் இதன்போது உறுதிப்படுத்தினார்.

ஜனாதிபதி அநுரகுமாரவை சந்தித்தமையை கௌரவமான விடயமாகக் கருதுகின்றேன். ஜனாதிபதி அநுரவுக்கு இந்தியப் பிரதமர் மோடியினதும், இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவினதும் வாழ்த்துகளைத் தெரிவித்தேன். இந்திய - இலங்கை உறவு தொடர்பில் ஜனாதிபதி அநுர கொண்டுள்ள அவரது அன்பான உணர்வுகளுக்கும், வழிகாட்டுதலுக்கும் பாராட்டுகள் என்றும் ஜெய்சங்கர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-இ)

### அநுரவின்...

நோர்வேயின் முன்னாள் தூதுவரான எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் எரிக்சொல்ஹெய்ம் மேலும் தெரிவித்ததாவது:-

"சர்வதேச சமூகம் இலங்கைக்கு ஆதரவளிக்கவேண்டும். இலங்கையின் புதிய ஜனாதிபதியாக அநுரகுமார தெரிவு செய்யப்பட்டு இரண்டு வாரங்களாகின்றன. இந்தக் காலத்தை அவர் மிகச் சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளார். அவர் இராஜதந்திர செயற்பாடுகளை மிகச்சரியான முறையில் முன்னெடுத்துள்ளார். முதலில் இந்தியத் தூதுவருடன் சந்திப்பு, பின்னர் சீனத் தூதுவருடன் சந்திப்பு. முதலில் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கான அழைப்பு என 'இலங்கையின் நலன்களுக்கு முதலிடம்' கொள்கையில் உறுதியாக உள்ளார்.

பதவியேற்றதும் அநுர உடனடியாக கண்டியில் தலதா மாளிகைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். அவர் அங்கு மகாநாயக்க தேரர்களின் ஆதரவைப் பெற்றார். அதன் பின்னர் அவர் தமிழ், முஸ்லிம் மதத் தலைவர்களைச் சந்தித்துள்ளார். அனைத்து இனங்களுக்குமான இலங்கையை உருவாக்குவதற்குத் தான் கொண்டுள்ள அர்ப்பணிப்பை அநுர இதன்மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

அத்துடன், அவர் வர்த்தகர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். ஊழலற்ற குழுவை ஆட்சிக்குக் கொண்டுவர முன்னின்று செயற்படுகின்றார். இவையெல்லாம் நிச்சயமாக சிறந்த ஆரம்பம் என்பதில் மாற்றுக் கருத்தில்லை" - என்றார். (அ-ம-இ)

### 50 தமிழக...

நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழக அரசியல் பிரதிநிதிகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தனர். அத்துடன், தமிழகத்தில் நேற்றுமுன்தினம் உணவுத் தவிர்ப்புப் போராட்டமும் இடம்பெற்றது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 50 மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறையை அண்மித்த கடற்பரப்பில் கடந்த 21 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்த 37 மீனவர்களும் நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிமன்றம் கடுமையான எச்சரிக்கையுடன் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனைகளை விதித்து அவர்களை விடுவித்தது.

அத்துடன் 13 மீனவர்களுக்கு எதிரான வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது 13 மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர். இன்னும் நால்வருக்கு தலா ஓர் ஆண்டும், ஒருவருக்கு ஒன்றரை ஆண்டும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (அ-ம-100-66-20)

### நீர்வேலியில்...

கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஒன்றுதிரண்ட மக்கள், மதுபானசாலைக்கான அனுமதியை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் கோப்பாய் பிரதேச செயலரிடம் மனுவொன்றையும் அவர்கள் கையளித்துள்ளனர்.

(அ-ம-17-66)

### முதியவர்...

உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கட்டாரில் இருந்து இரண்டு வருடங்களுக்கு முன்னர் தாயகம் திரும்பிய அவர் கடந்த சில மாதங்களாகத் தனிமையில் வசித்து வந்திருந்தார் என்று விசாரணைகளின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை யாழ்ப்பாணம் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

(அ-ம-100-20)

### இந்தியாவுக்கு...

திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமாரவுக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி அநுர இவ்வாறு தெரிவித்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு அறிக்கையிட்டுள்ளது.

அத்துடன், இலங்கை மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு இந்தியாவின் பொருளாதார ஆதரவு மிகவும் முக்கியமானது என்றும் ஜனாதிபதி அநுர தெரிவித்ததாக அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-6)

### அரசியல்...

யுள்ளார். இதன்படி இலங்கையின் பிரதமர் ஹரிணி, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், முன்னாள் ஜனாதிபதி ரணில், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உள்ளிட்டோரை ஜெய்சங்கர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். (அ-ம-இ)

### உயர்கிறது...

தின் அடிப்படையில் அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 289.49 ரூபாவாகவும், விற்பனை விலை 298.49 ரூபாவாகவும் நேற்றுப் பதிவாகியுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருக்கலைப்புக்கு ஆதரவு

அமெரிக்க அதிபர் தேர்தல் ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்பின் மனைவி மெலனியா ட்ரம்ப், கருக்கலைப்பு செய்வது பெண்களின் உரிமை என்று தெரிவித்துள்ளார். கருக்கலைப்பை ட்ரம்ப் எதிர்த்துவரும் நிலையில் மெலனியா அதற்கு ஆதரவு தெரிவித்துள்ளமைகுறிப்பிடத்தக்கது. (ம)

## தாக்குதல்

சனா, ஒக். 5

செங்கடலில் பயணித்த பிரிட்டனின் கப்பலொன்றின் மீது நேற்று 8 ஏவுகணைகளால் ஹவுத்தி தாக்குதலை நடத்தியுள்ளது.

இரண்டு தினங்களுக்கு முன்னர், இஸ்ரேலும் அமெரிக்காவும் ஏமனில் உள்ள ஹவுத்தியின் நிலைகளை இலக்குவைத்து மேற்கொண்ட தாக்குதலுக்குப் பதிலடியாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஹவுத்தியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹவுத்தியிடம் இருந்து செங்கடலைப் பாதுகாப்பதற்காகச் செயற்படும் ஆயுதக் கூட்டணிக்கு அமெரிக்காவுடன் பிரிட்டனும் இணைத்தலைமை வகித்து வருகின்றமைகுறிப்பிடத்தக்கது. (ம)


### வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல்யமான தொழிற்சாலை ஒன்றிற்கு பின்வரும் வேலையாள் தேவை.

**பொதிசெய்பவர்**

**076 368 1315**

(cs 56351) (N-1)

### கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.

**குறிப்பு:** இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"




**ஆர்க் .என். கம்பனி**

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 973 9917

(CS/55948) J-1

### விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி

இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774

**A/L 2026**

தொழினுட்பப் பிரிவு

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

05.10.2024 காலை 8.01

- தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படும்
- அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்

தொடர்புகளுக்கு:- 077 248 7774 / 076 552 9093

"தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு" இதுவே எமது இலக்கு

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பளையில் (அரசர்கேணி கிராமம்)

44 நிலப்பரப்பு 6 3/4 குளி உடைய காணி விற்பனைக்குண்டு.

(உரிமையாளருடன் தொடர்புகொள்ள வேண்டிய நேரம் 10.00 a.m - 5.00 p.m

**074 109 2431**

(cs.1513) (N-1)

### காணி விற்பனைக்கு உண்டு

- யாழ்ப்பாணம் கைதடியில் 60 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு A9 வீதி முகப்புடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00
- தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு:

**077 294 1521, 077 468 3354**

(CS5637) V-1

### காணி விற்பனைக்கு

யாழ்பாணம் உரும்பிராயில் 27 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு உண்டு செல்லத்துரை வீதி முகப்புடன்

- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- உரும்பிராய் சந்தி 750m தூரம்
- உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காப்பற் வீதி 250m தூரம்
- தண்ணீர் ஊற்று, செம்மண் நிலம், நல்லசூழல்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00 வரை

தொடர்புகளுக்கு:

**077 288 0152, 076 739 0413**

### யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

இன்றுமுதல் (04.10.2024) தீபாவளி தினம் வரை

**இந்தியன் செலக்‌ஷனின்**

பிரமாண்டமான

**தீபாவளி**

SPECIAL OFFER!

ஜவுளிக் கொண்டாட்டம்



சாறி OFFER விசேட விலைக் கழிவு

~~1500/=~~ → 1000/=

~~3000/=~~ → 2000/=

~~3500/=~~ → 2500/=

~~4000/=~~ → 2800/=

~~6000/=~~ → 4000/=

நூற்றுக்கணக்கான டிசைன்களில் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், லெஹங்கா, டொப், பார்ட்டி புறொக் என ஏராளமான ஆடைத்தெரிவுகள்

இம்முறையும் தீபாவளியை இந்தியன் செலக்‌ஷனுடன் கொண்டாடுங்கள்

காலம் : 04.10.2024 - தீபாவளி தினம் வரை

இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

(வாரத்தின் 07 நாட்களும் திறந்திருக்கும்)

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் பிரதான வீதி முகப்புடன் 44 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான காப்பற் வீதி
- அல்லைப்பிட்டி சந்திக்கு அருகாமை
- சர்வதேச ஆங்கில பாடசாலை அருகாமையில்
- பெற்றோல் செட் திருமண மண்டபங்கள் வியாபார நிலையங்கள் வீடுகள் அமைக்க உகந்த காணி.
- நன்னீர் ஊற்று நிலம்
- 5 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- சீரான ஆவணங்கள்
- யாழ்நகரில் இருந்து 4 km தூரத்தில்

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

தொடர்புகளுக்கு:

**077 030 2523**

(CS1529) V-1

### ஈழத்து சித்தர்கள் சித்தம்

தொகுப்பு : ஆத்மஞான பூரணர்

**நூல் வெளியீட்டு விழா**

இடம் : பூரண நிலையம், பலாலி வீதி, யாழ். ஊரெழு

காலம் : 06.10.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

நிகழ்ச்சிகள் : மேலைத்தேயத்தவர்களின் தமிழ் பஜனை

புத்தக வெளியீடு

ஆன்மீக உரை

நூல் வழங்கல் (இலவசம்)



தொடர்புகளுக்கு: 076 710 0000, 077 431 1743


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.